| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கல்வித்துறை – பெரம்பலூர் மாவட்டம் - ஒன்பதாம் வகுப்பு | | | |
| தமிழ் – அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2024 - 2025 | | | |
| உத்தேச விடைக்குறிப்புகள் | | | |
| பகுதி - I | | | |
| I | **அனைத்து வினாக்களுக்கும் குறியீட்டுடன் விடையளிக்கவும்.** | | 15 x 1 = 15 |
| 1 | ஆ | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் | 1 |
| 2 | ஈ | புலரி | 1 |
| 3 | ஈ | தொகைச்சொற்கள் | 1 |
| 4 | இ | தொல்காப்பியம் | 1 |
| 5 | ஈ | எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை | 1 |
| 6 | இ | முல்லை | 1 |
| 7 | இ | அள்ளல் - சேறு | 1 |
| 8 | இ | திருத்தக்க தேவர் | 1 |
| 9 | ஆ | தீர்த்தங்கரர் உருவங்கள் | 1 |
| 10 | ஆ | ஊரகத் திறனறித் தேர்வு | 1 |
| 11 | இ | சிற்றிலக்கியம் | 1 |
| 12 | ஆ | சிறுபஞ்சமூலம் | 1 |
| 13 | அ | காரியாசான் | 1 |
| 14 | அ | பூவாது - மூவாது | 1 |
| 15 | ஆ | வினையாலணையும் பெயர் | 1 |

| | | |
|---|---|---|
| பகுதி - II | | |
| பி – 1 | **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**<br>**21 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்** 4 x 2 = 8 | |
| 16 | நான் பேசும் மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தமிழ்மொழியாகும் | 2 |
| 17 | விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க. ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | |
| அ | திருக்குறளை இயற்றியவர் யார் ? | 1 |
| ஆ | பல்லவர் கால சிற்பங்கள் எங்கு உள்ளது ? | 1 |
| 18 | உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலையே "கூவல்" என்று அழைக்கப்படுகிது. | 2 |
| 19 | ❖ கூட்டுப் புழுவாக இருந்த பட்டுப்பூச்சிதான், பட்டாடையாக மாற்றம் கண்டு பெருமையடைகிறது.<br>❖ அதுபோல், நமக்குத் தரப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைக் கடைபிடித்து ஒழுகினால் வாழ்வில் மேன்மை அடையலாம். | 2 |
| 20 | திருக்குறள், அக்னிச் சிறகுகள், குடும்ப விளக்கு, நாலடியார், அண்ணாவின் சிறுகதைகள் ஆகியவை நாங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்களாகும்.<br>(பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்கலாம் ) | 2 |
| 21 | மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் | 2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | தகுதியான் வென்று விடல் - திருவள்ளுவர் | |
| பி 2 | **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** | 5 x 2 = 10 |
| 22 | *தொடரின் வகையைச் சுட்டுக.*<br>*( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக )* | |
| அ | வீணையோடு வந்தாள் – வேற்றுமைத் தொடர் | 1 |
| ஆ | கிளியே பேசு - விளித் தொடர் | 1 |
| 23 | *தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.* | |
| அ | சித்திரமும் கைப்பழக்கம் **<u>செந்தமிழும் நாப்பழக்கம்.</u>** | 1 |
| ஆ | கற்றோர்க்குச் சென்ற **<u>இடமெல்லாம் சிறப்பு</u>**. | 1 |
| 24 | *பிழை நீக்கி எழுதுக.* | |
| அ | நல்ல தமிழில் எழுதுவோம். | 1 |
| ஆ | குழலிக்கும் பாடத் தெரியும். | 1 |
| 25 | *சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுப்படுத்து.* | |
| அ | மழை பெய்தது.<br>❖ நேற்று மழை பெய்தது.<br>❖ நேற்று காலையில் மழை பெய்தது.<br>❖ நேற்று காலையில் ஆலங்கட்டி மழை பெய்தது.<br>❖ நேற்று காலையில் அளவுக்கு அதிகமாக ஆலங்கட்டி மழை பெய்தது.. | 1 |
| ஆ | **வானவில்லைப் பார்த்தேன்.**<br>❖ நான் வானவில்லைப் பார்த்தேன்.<br>❖ நான் நேற்று வானவில்லைப் பார்த்தேன்.<br>❖ நான் நேற்று காலையில் வானவில்லைப் பார்த்தேன்.<br>❖ நான் நேற்று காலையில் அழகான வானவில்லைப் பார்த்தேன். | 1 |
| 26 | *விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.* | |
| அ | பத்துப்பாட்டு – 10 - க0, எட்டுத்தொகை - 8 - அ | 1 |
| ஆ | சிற்றிலக்கிய வகைகள் – 96 – சுஉ0 | 1 |
| 27 | *கலைச்சொல் தருக.* | |
| அ | WATER MANAGEMENT - நீர் மேலாண்மை | 1 |
| ஆ | DOWNLOAD - பதிவிறக்கம் | 1 |
| 28 | *அகராதியில் காண்க.* | |
| அ | நசை – ஆசை | 1 |
| ஆ | கான் – காடு | 1 |
| | பகுதி - III | |
| பி-1 | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** | 2 x 3 = 6 |
| 29 | "டோக்கியோ கேடட்ஸ்".<br>இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, | 3 |

| | | |
|---|---|---|
| | வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகாதமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ். | |
| 30 | ❖ நடுவண் அரசும் மாநில அரசும் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு ஆண்டுதோறும் பல போட்டித் தேர்வுகள் நடத்துகின்றன. அவற்றுக்கான விண்ணப்பங்கள் இணையத்தின் வழி விண்ணப்பிக்கலாம்.<br>❖ பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பும் முடிந்த மாணவர்களுக்கு அரசின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செய்ய வேண்டிய பதிவு ஆண்டுதோறும் இணையத்தின் வழியாகச் செய்யப்பட்டு வருகிறது.<br>❖ பள்ளிக்கல்வி முடித்த மாணவர்கள் கல்லூரிகளுக்கு இணையம் வழியாக விண்ணப்பிக்கலாம். | 3 |
| 31 | **உரைப்பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை தருக.** | |
| அ | வானியல் | 1 |
| ஆ | அப்துல் கலாம், மயில்சாமி அண்ணாதுரை, வளர்மதி, சிவன் | 1 |
| இ | சிவன் | 1 |
| பி-2 | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**<br>**34 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்** | 2x3=6 |
| 32 | ❖ பாரதியார் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்" என்று பாடியுள்ளார். அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் பிறமொழி நூல்களை நம் தமிழ்மொழியில் மொழி பெயர்ப்பேன்.<br>❖ இலக்கியங்களைக் காலக் கண்ணாடி என்றும் கூறுவர். அதனால் இன்றைய காலக் கட்டத்திற்கு நம் மாணவர்களுக்குத் தேவையானவற்றை எளிதில் பொருள்விளங்கக் கூடிய வகையில் நூல்கள் இயற்றுவேன்<br>❖ அறிவியல் சார்ந்த நூல்களை எளிமையான தமிழில் உருவாக்குவேன். | 3 |

33 (3)

| அறிவுநிலை | அறியும் ஆற்றல் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ஓரறிவு | உற்றறிதல் (தொடுதல் உணர்வு) | புல், மரம் |
| ஈரறிவு | உற்றறிதல் + சுவைத்தல் | சிப்பி, நத்தை |
| மூவறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் | கரையான், எறும்பு |
| நான்கறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் | நண்டு,தும்பி |
| ஐந்தறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் | பறவை, விலங்கு |
| ஆறறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் + பகுத்தறிதல் | (மனம்) மனிதன் |

| | | |
|---|---|---|
| 34 | காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு<br>மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை<br>கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன<br>நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம் - சேக்கிழார் | 3 |
| பி 3 | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** | 2x3=6 |

35
- ❖ வல்லெழுத்துகள் க,ச,த,ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும்,
- ❖ இவை நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர்.
- ❖ இவ்வாறு எந்த எந்த இடங்களில் அவ்வல்லினம் மிகும் என்பதை விதிகளின் மூலமும் எடுத்துக்காட்டுகள் மூலமும் அறியலாம்.
- ❖ (எ.கா) அச்சட்டை, கதவைத்திற, எனக்கேட்டார், எட்டுத்தொகை, மல்லிகைப்பூ
- ❖ நாம் பேசும் போதும் எழுதும் போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

3

36

| | | |
|---|---|---|
| இலக்கணம் | ஒரு பொருளை அத்தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை அணி எனப்படும். | |
| சான்று | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை<br>இகழ்வார் பொறுத்தல் தலை. | |
| பொருள் | தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்பவரைப் பொறுப்பதே தலைசிறந்தது. | 3 |
| விளக்கம் | உவமை, உவமேயம், உவம உருபு (போல) ஆகிய மூன்றும் வெளிப்படையாகக் காணப்படுவதால் இப்பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது. | |

37

| சீர் | அசை | | | வாய்பாடு |
|---|---|---|---|---|
| இன் / பத் / துள் | நேர் | நேர் | நேர் | தேமாங்காய் |
| இன் / பம் | நேர் | நேர் | - | தேமா |
| பயக் / கும் | நிரை | நேர் | - | புளிமா |
| இக/ லென் / னும் | நிரை | நேர் | நேர் | புளிமாங்காய் |
| துன்/ பத் / துள் | நேர் | நேர் | நேர் | தேமாங்காய் |
| துன் / பங் | நேர் | நேர் | - | தேமா |
| கெடின் | நிரை | | | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாட்டைக் கொண்டு முடிந்துள்ளது.

3

IV **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 x 5= 25

38

முன்னுரை:

நிலைத்த புகழுடைய கல்வியாலும் சாதனைகளாலும், பல தடைகளைத் தாண்டிப் பல பெண்மணிகள் சாதனை புரிந்து அழியாப் புகழ் பெற்றுள்ளனர். அவர்களுள் சிலரைப் பற்றி அறிந்து கொள்வோம்.

பண்டித ரமாபாய்:

1858-ஆம் ஆண்டு முதல் 1922 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த இவர் சமூகத் தன்னார்வலர், பல தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர். "பெண்மை என்றால் உயர்வு" என்பதற்குச் சான்றாவார்.

ஐடாஸ் சோபியா:

1870 முதல் 1960 வரை வாழ்ந்தவர். பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் மருத்துவம் கற்றதோடு, தமிழகத்திற்கு வந்து மருத்துவராகி

5

| | | |
|---|---|---|
| | வேலூர் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனையை நிறுவியவர்.<br>மூவலூர் இராமாமிர்தம்:<br>1883 முதல் 1962 வரை வாழ்ந்த இவர், தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி. எழுத்தாளர், அரசியல் செயல்பாட்டாளர், தேவதாசி ஒழிப்புச்சட்டம் நிறைவேற துணைநின்றவர். இவரைச் சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு மகளிர் திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கி வருகிறது.<br>சாவித்திரிபாய் பூலே:<br>1831 முதல் 1897 வாழ்ந்தவர். 1848 ம் ஆண்டு பெண்களுக்கென தொடங்கப்பட்ட பள்ளியில், ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர் ஆவார்.<br>மலாலா:<br>பாகிஸ்தானில் ஒடுக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு. பெண் கல்வி வேண்டுமெனப் பன்னிரண்டு வயதிலே போராட்டக்களத்தில் இறங்கிய வீரமங்கை ஆவார்.<br>முடிவுரை:<br>இன்று பல்துறைகளிலும் சிறப்புற்று விளங்க, முன்பே வழிகாட்டிய இவர்கள் அனைவருமே சாதனைப் பெண்மணிகளே<br>"புவி வளம் பெறவே புதிய உலகம் நலம்பெறவே வாழியவே பெண்மை வாழியவே" | |
| | (அல்லது) | |
| | சேரநாடு:<br>சேறுபட்ட நீர்வளம் மிகுந்த செவ்வாம்பல் மலர்கள் வாயவிழ்ந்து விரிந்தன. அவற்றைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்தது என எண்ணி தமது கைகளான சிறகுகளைப் படபடவென அடித்து, தம் குஞ்சுகளைத் தீயினின்று காப்பாற்றும் பொருட்டு அணைத்துக்கொண்டன. இப்பறவைகளின் இத்தகு ஆரவாரம் தவிர, மக்கள் துயரமிகுதியால் செய்யும் ஆரவாரத்தைச் சேரநாட்டில்<br>காண இயலாது.<br>சோழநாடு:<br>சோழநாடு ஏர்க்களச்சிறப்பையும், போர்க்களச் சிறப்பையும் கொண்டிருந்தது. வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போரின் மீது ஏறி நின்று கொண்டு அருகில் இருக்கும் உழவர்களைப் பார்த்து "நாவலோ" என்று கூவி அழைப்பர் ( நாவலோ "இந்நாள் வாழ்க சிறக்க" என்று பொருள்) இவ்வாறு வயல் வளம் மிகுந்ததாகக் காணப்பட்டது சோழநாடாகும்.<br>பாண்டியநாடு:<br>பாண்டியனுடைய ஒளி பொருந்திய நாட்டின்கண் எங்கு நோக்கினும் முத்துக்குவியலே காணப்பட்டது. வெண்சங்குகள் மணலில் ஈனுகின்ற இளஞ்சினையும், குவிந்து கிடக்கின்ற புன்னை மரத்தின் அரும்புகளும், பாக்கு மரங்களின் பாளைகளில் இருந்து சிந்திய மணிகளும் முத்துக் குவியல்களைப் போலவே காட்சியளித்தன. | 5 |
| 39 | தோழிக்குக் கடிதம்<br>எறையூர்,<br>09-12-2024. | 5 |

| | | |
|---|---|---|
| | அன்புள்ள தோழி,<br>வணக்கம். நலம் நலமறிய ஆவல். என்னுடைய பிறந்த நாள் பரிசாக நீ அனுப்பிய எழுத்தாளர் இராமகிருஷ்ணன் எழுதிய "கால் முளைத்த கதைகள்" என்ற நூல் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி.<br>முப்பது பழங்குடியினர் சொன்ன கதைகளிலிருந்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உலகம் தோன்றியது எப்படி? என்ற வினாவிற்கு இன்றுவரை தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. உலகம் தோன்றியதற்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன.<br>இந்நூலில் நாய் ஏன் பூனையைத் துரத்துகிறது? கொசு ஏன் கடிக்கிறது? வண்ணத்துப் பூச்சிகள் ஏன் பூக்களைச் சுற்றுகிறது? போன்ற தலைப்புகளில் கதைகள் உள்ளன. குழந்தைகள் மிகவும் விரும்பிப் படிப்பதற்கு ஏற்ற இனிய எளிய சொற்களால் சிறுசிறு கதைகள் அமைந்துள்ளன.<br>உன் பிறந்த நாளுக்கு இது போன்றதொரு நூலை உனக்கு நானும் அனுப்புவேன். மிக்க மகிழ்ச்சி.<br>இப்படிக்கு,<br>உன் அன்புத் தோழி.<br>த.பார்கவி.<br>உறைமேல் முகவரி<br>செல்வி.திவ்யா ச<br>16, தெற்கு வீதி, கிளியூர் அஞ்சல்,<br>குன்னம் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம். 621718. | |
| | (அல்லது) | |
| | **பதிப்பகத்திற்குக் கடிதம்**<br>அனுப்புநர்:<br>க.திவாகர்,<br>அரசு மேனிலைப்பள்ளி,<br>பெரம்பலூர்.<br>பெறுநர்:<br>மேலாளர் அவர்கள்,<br>நெய்தல் பதிப்பகம்,<br>சென்னை - 17.<br>பொருள்: தமிழ் - தமிழ் ஆங்கிலம் கையடக்க அகராதி வேண்டுதல் சார்பாக...<br>ஐயா,<br>வணக்கம். தங்கள் பதிப்பகம் மூலம் வெளிவந்துள்ள தமிழ் தமிழ் ஆங்கிலம் எனும் கையடக்க அகராதி எங்கள் பள்ளி நூலகத்திற்குப் பத்துப் படிகள் தேவைப்படுகின்றன. தாங்கள் வெளியிட்டுள்ள அகராதி படிப்பதற்கும் பொருள் காண்பதற்கும் மிக எளிமையாகவுள்ளது. ஆகவே, அகராதியின் பத்துப் பிரதிகளைப் பதிவஞ்சலில் அனுப்பிட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் பத்துப் பிரதிகளுக்கான வரைவோலையை | 5 |

| | | |
|---|---|---|
| | இணைத்து அனுப்பியுள்ளேன்.<br>நன்றி.<br>இடம் :பெரம்பலூர் இப்படிக்கு,<br>நாள் : 09-12-2024 க.திவாகர்<br>உறைமேல் முகவரி<br>பெறுநர்:<br>மேலாளர் அவர்கள்,<br>நெய்தல் பதிப்பகம்,<br>சென்னை - 17. | |
| 40 | எனது பயணம் - இயற்கையின் தாய்மடி - உதகை<br>கடந்த 2024 நவம்பர் மாதம் இயற்கை எழில் கொஞ்சும் உதகைக்கு நான் சுற்றுலா சென்றிருந்தேன். அந்த அழகான பயண அனுபவங்களை உங்கள் அனைவரிடமும் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.<br>அரக்கோணம் தொடர்வண்டி நிலையத்திலிருந்து நீலகிரி விரைவு வண்டியில் முன்பதிவு செய்து, உதகமண்டலத்தின் அடிவாரமான மேட்டுப்பாளையத்தைச் சென்றடைந்தோம். பயணத்தின் தொடக்க அனுபவமே இனிய அனுபவமாக அமைந்தது. மறுநாள் விடியற்காலை 5.00 மணிக்கு தொடர்வண்டி மேட்டுப்பாளையத்தைச் சென்றடைந்தது.<br>மேட்டுப்பாளையத்திலிருந்து, தமிழகத்தின் பெருமையான நீலகிரி மலை இரயில் மூலம் பயணிக்கத் தொடங்கினோம். மலைகள்,காடுகள்,ஆறுகளைக் கடந்து, புகையைக் கக்கிக்கொண்டே அந்த தொடர்வண்டி சென்றது மெய்ம்மறக்கும் அனுபவமாக அமைந்தது.<br>3 மணி நேரம் பயணத்திற்குப் பிறகு உதகமண்டலத்தை அடைந்தோம்.அங்கே நாங்கள் பார்த்த அரசு தாவரவியல் பூங்கா, மலர் கண்காட்சி,தொட்டபெட்டா சிகரம், பைக்காரா நீர்வீழ்ச்சி, பைக்காரா படகு சவாரி, குன்னூர் உள்ளிட்ட இடங்கள் யாவுமே இன்று நினைத்தாலும் மெய்சிலிர்க்கக் கூடிய இடங்களாக அமைந்துள்ளன. | 5 |
| | (அல்லது) | |
| | அன்பின்வழி<br>அன்பே வழியென ஆன்றோர் பகர்ந்தனர்<br>அன்பே பண்பென ஆக்கிடுவோமே<br>அன்பே எல்லாம் என்றிருந்தால்<br>அன்பின் வழியில் அமையும் நல்வாழ்வு.<br>( சந்த நயம், எதுகை, மோனைச் சொற்கள் அமைந்திருப்பின் (கவிதை வடிவில்)<br>முழு மதிப்பெண் வழங்கலாம்.) | 5 |
| 41 | என்னை உயர்வாகப் பேசுவது எனக்குப் பிடிக்கும். எவரையும் காயப்படுத்தாமல் நடந்துகொள்வது, குறைகூறாமல் பேசுவது என் பொறுப்பு.<br>எனக்குப் படம் வரைவது பிடிக்கும்.<br>பள்ளிச்சுவர், வீட்டுச்சுவர், பொதுச்சுவர் ஆகியவற்றில் வரையாமல் எழுதாமல் இருப்பதோடு | 5 |

| | | |
|---|---|---|
| | பிறரையும் அவ்வாறு செய்யவிடாமல் தடுப்பது என் பொறுப்பு. | |
| | (அல்லது) | |
| | Linguistics –மொழியியல்     Literature - இலக்கியம்<br>Philologist மொழி ஆய்வறிஞர்     Polyglot - பன்மொழி அறிஞர்<br>Phonetics - ஒலியியல் | |
| 42 | சந்த நயம், எதுகை, மோனைச் சொற்கள் அமைந்திருப்பின் (கவிதை வடிவில்)<br>முழு மதிப்பெண் வழங்கலாம்.<br>தன்னம்பிக்கை என்னும்<br>உளி கொண்டு<br>தளராத முயற்சியில்<br>என்னைச் செதுக்குகிறேன்<br>வலி பொறுத்து சாதனையாளராக! | 5 |
| V | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** | 3 x 8 = 24 |
| 43<br>அ | ❖ தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில்காளையைக் கொன்று அடக்குபவனே வீரன் அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.<br>❖ காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை சிலநாட்டுவிளையாட்டுக்களில் கொல்லப்படுவதும் உண்டு.<br>❖ அது வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.<br>❖ தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது.<br>❖ நிகழ்வின் தொடக்கத்திலும்முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர்.<br>❖ எவராலும் அடக்கமுடியாத காளைகள்வெற்றிபெற்றதாகக் கருதப்படும்.<br>❖ அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீராகப் போற்றப்படுவர். | 8 |
| | ( **அல்லது**) | |
| ஆ | சொக்கநாதருக்குத் தூது சென்ற தமிழ்<br>மதுரையில் கோவில் கொண்டுள்ள சொக்கநாதப் பெருமான் மீது விருப்பம் கொண்ட பெண்ணொருத்தி. தன் அன்பை வெளிப்படுத்தி வருமாறு தூது அனுப்ப. அவள் தேர்ந்தெடுத்தது தமிழ் மொழியைத்தான்.<br>தூது செல்வோரின் தகுதி:<br>தூது செல்பவர் பல்வேறு திறனுடையவராய் இருக்க வேண்டும். அவர் இனிமையாய், இலக்கியச் சுவையோடு நலமும் அழகும் குறையாமல் செய்தியைத் தெரிவிப்பவராய் இருத்தல் வேண்டும். தாம் கூற வரும் செய்தியைக் குற்றம் குறைவின்றித் தெளிவாய் எடுத்துக்கூறும் திறன் படைத்தவராய் இருத்தல் வேண்டும். அப்போதுதான் தூது சென்றதற்கான பயன் கிடைக்கும். தமிழ்மொழி மேற்கூறிய சிறப்புகளை உடையது. அத்திறன்களோடு கூடவே. இனிய பாச்சிறப்பும் பெற்றிருப்பதால் தலைவன் சொக்கநாதப் பெருமானிடம் தூது செல்லும் அனைத்துக் தகுதிகளையும் பெற்றுத் திகழ்கிறது தமிழ். இவற்றைக் கருதியே சொக்கநாதப் பெருமானிடம் தூதாகத் தமிழை அனுப்புகிறாள் தலைவி. | 8 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 44<br>அ | **வீட்டிற்கோர் புத்தகசாலை**<br>முன்னுரை:<br>மனிதனின் சிந்தனையைத் தூண்டுவது நூல்களே. இசையைப் போல மனதைப் பண்படுத்துவதும் நூல்களே எனில் மிகையாகாது 'வீட்டிற்கோர் புத்தகசாலை" என்னும் அண்ணாவின் வானொலி உரை மூலம், நூலகம், நூல்கள் குறித்து வெளிப்படும் கருத்துகள் குறித்து பார்ப்போம்.<br>நூலகம் :<br>ஒரு நாட்டின் நிலை, உலக நிலைக்கேற்ப வளரவேண்டும் எனில் வீட்டு நிலை மாற வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை (நூலகம்) வேண்டும். ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே ஆகும். நல்ல மனவளம் தருவது நூலகமே "வீட்டிற்கோர் புத்தகசாலை" என்ற இலக்கினை நடைமுறைப்படுத்தினால் நமது சந்ததி நல்ல மனவளம் பெறுவர். நாடு நலமும் வளமும் பெறும், வீட்டில் அலங்காரப் பொருட்களுக்கு போகப் பொருள்களுக்கு முக்கியத்துவம் தரும் நிலை மாறவேண்டும் ஒவ்வொரு வீடுகளிலும் புத்தகசாலைக்கு இடம் தரப்பட வேண்டும் உணவும் உடையும் எவ்வாறு அடிப்படைத் தேவையோ அதைப் போலவே. நூலகமும் அடிப்படைத் தேவையாகும்.<br>நூல்கள் :<br>நாட்டை அறிய. உலகை அறிய, ஒருவன் தன்னை அறிய ஏடுகள் (நூல்) வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள்தான் என்பதன்று. அடிப்படை அறிவை. உண்மையை உணர்த்தும் நூல்களையாவது கற்க முனையுங்கள். பூகோள, சரித ஏடுகள் இருத்தல் வேண்டும் வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயம் வேண்டும். சங்க இலக்கியங்களின் சாரத்தைத் தீட்டித்தரும் நூல்களும் இருக்க வேண்டும். கற்க வேண்டும்.<br>விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தரவுகளைத் தரும் நூல்கள் படித்திடல் வேண்டும்.<br>நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள் தொலைதேசங்களைக் கண்டவர்கள். வீரர்கள் விவேகிகள் வாழ்க்கை வரலாறு ஆகி நூல்கள் இருத்தல் வேண்டும் என்கிறார் பேரறிஞர் அண்ணா<br>முடிவுரை<br>கேட்டினை நீக்கிட வீட்டிலே புத்தகசாலை அமைப்போம் | 8 |
| | (அல்லது) | |
| ஆ | **தண்ணீர்**<br>முன்னுரை:<br>"நாகலிங்கம்" என்னும் இயற்பெயரைக் கொண்ட கந்தர்வன் அவர்கள் சமூக அவலங்கள் மானுட பிரச்சனைகளை மையமாகக் கொண்டு கதை புனைவதில் வல்லவர் "சாசனம்", "ஒவ்வொரு கல்லாய்". கொம்பன்" முதலிய வரிசையில் 'தண்ணீர்' சிறுகதையும் சமூக நிலையை எடுத்துக் காட்டும் கதையாக உள்ளது.<br>குடிநீரற்ற ஊரின் நிலை. :<br>பெண்கள் தலையிலும், இடுப்பிலுமாகக் குடங்கலைக் கொண்டு பிலாப்பட்டி வரை சென்று ஊற ஊற நீர் எடுத்து வரும் அவலநிலைதான் இருந்தது. | 8 |

| | | |
|---|---|---|
| | பல்லாண்டுகளுக்கு முன் உலகம்மன் கோயில் கிணறு மட்டும் கொஞ்சம் தண்ணீர் தந்து கொண்டிருந்தது. இப்போது அதுவும் தூர்ந்து பாழுங்கிணறாய் மாறி விட்டது. எல்லாமே பூண்டற்று போய் விட்டன.<br>எங்காவது கிணறு தோண்டினாலும் கடல் தண்ணீரைவிட ஒரு மடங்கு கூடுதலாக உப்பு, கிணற்று நீரிலே உப்பளம் போடலாம்' குடலை வாய்க்குக் கொண்டு வரும் உவர்ப்பாகவே இருந்தது. இதுவே தண்ணீர் கதையில் இடம் பெற்றுள்ள ஊரின் நிலை.<br>இரயிலின் வருகையும் மக்கள் ஓட்டமும் :<br>இப்படிப்பட்ட வறண்ட ஊருக்கு வரப்பிரசாதமாய். தினமும் வரும் பாசஞ்சர் இரயில் அமைந்தது. இரயில் 3 கி.மீட்டருக்கு முன்பே அருவமாய் எழுப்பும் ஊதல் ஒலி கேட்டு, மக்கள் ஓட்டமும் நடையுமாய் இரயில் நிலையம் செல்வர்.<br>அந்த இரயிலில் வரும் நீருக்காக ஓடுபவர் ஒருவரையொருவர் இடித்தும், பிடித்தும் முறைத்தும் முந்திக் கொண்டு இடம் பிடிக்க ஓடுவார்கள்.<br>இந்திராவின் கனவு:<br>அந்த ஊரில் இருந்த இளம்பெண் இந்திராவும், இக்கூட்டத்தில் ஒருத்தியாக நின்று தன்னை வேறு ஓர் ஊரில் உள்ளவருக்குத்தான் திருமணம் பேசப் போவது போலவும், இந்த தண்ணியில்லா ஊரில் உள்ள எவனுக்கும் தலை நீட்டக் கூடாது என்றும் கனவு கண்டு கொண்டே இரயில் பெட்டிக்குள் நுழைந்தாள்.<br>இந்திரா தண்ணீர் பிடித்தல் :<br>பயணிகள் இறங்குவதற்கு முன்பாகவே இந்திரா பெட்டிக்குள் பாய்ந்து முகம் கழுவும் பேசின் குழாயை அழுத்தி வேக வேகமாக அரைச் செம்பும். கால் செம்புமாக பிடித்துக் குடத்தில் ஊற்றினாள் தொடர்ந்து பிடித்துக் கொண்டே இருந்தாள் இரயில் நகர்ந்தது.<br>இந்திரா எங்கே :<br>எல்லோரும் பதற்றத்துடன் அண்ணான் வீடு, தம்பி வீடு, இராமநாதபுரம் பஸ்ஸில் ஏறி இரயில் நிலையம் சென்றபோது இராமநாதபுரம் இரயில் நிலையத்தில் ஈ. எறும்பு கூட இல்லை குடத்துடன் ஒரு பெண் வந்தாளா என்று அறிந்த தெரிந்த இடம் பூராவும் தேடியும் இந்திரா எங்கும் கிடைக்கவில்லை.<br>தாயின் துயரம் :<br>எம்புள்ள தண்ணி புடிக்கப் போயி எந்த ஊரு தண்டவாளத்துல விழுந்து கிடக்கோ' என அடக்க முடியாமல் ஓடினாள் இந்திராவின் தாய். ஊர் ஜனமும் பின்னால் ஓடியது. தாய் தண்டவாளத்திலே ஓட ஆரம்பித்தாள். தூரத்தில் புள்ளியாய் ஓர் உருவம் அதோ இந்திரா! "பயபுள்ள. இத்தன மைலு இந்த தண்ணியையுமா சொமந்துகிட்டு வந்த" என்று தந்தை கேட்டார். பின்னர் நாளைக்கு வரைக்கும் குடிக்க என்ன செய்ய " என்று இந்திரா சொன்னாள்<br>முடிவுரை<br>"உயிர்நீர்" எனப்படும் தண்ணீர் தேவையை அது இல்லா ஊரின் அவலத்தை இச்சிறுகதை மூலம் உணர்ந்த நாம் நீர் மேலாண்மையைக் கட்டமைப்போம்: மழைநீரை சேகரிப்போம்." | |
| 45 | தொகுப்புரை<br>தமிழ் இலக்கிய மன்ற விழா | 8 |

இடம் : அரசு உயர்நிலைப் பள்ளி, இலாடபுரம், பெரம்பலூர் மாவட்டம்.

நாள் : 09-12-2024

பெரம்பலூர் மாவட்டம். இலாடபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றக் கூட்டம் பிற்பகல் 3.00 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் மா.அருள் தலைமை தாங்கினார்.

மாவட்ட அளவில் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற 10.ஆம் வகுப்பு மாணவி க. நிலவு வரவேற்புரை நிகழ்த்தினார். இலக்கியங்களில் எவ்வாறு இன்பச்சுவை அமைந்து இருக்கிறது என்பது பற்றிப் பேசினார்.

தலைமை ஆசிரியர் தலைமை உரையில் இலக்கியத்தில் பாடுபொருள் எவ்வாறெல்லாம் காலத்திற்கேற்றாற் போல் மாறி வந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டிப் பேசினார்.

சிறப்பு விருந்தினர் முனைவர்.தமிழ்மாறன் அவர்கள், ஒன்பான் சுவைகளை சிறப்புச் சொற்பொழிவாற்றி நகைச்சுவை உணர்வோடு "இலக்கியத்தில் இன்பச்சுவை" எனும் தலைப்பில் இலக்கிய விருந்து படைத்தார்.

நிறைவாக இலக்கியமன்றச் செயலர் 9.ஆம் வகுப்பு மாணவி அன்புச் செல்வி நன்றியுரை ஆற்றினார்.

(அல்லது)

போதையற்ற உலகை உருவாக்குவோம்

முன்னுரை:

மனித மனதை சிதைத்து மனித இனத்தை அழிக்கும் பேரபாயமான வேலையை சுலபமாக செய்வது போதைப் பொருட்கள். இன்றைய சமுதாயம் எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சவால்களில் ஒன்று போதைப்பொருள்.

போதை ஒரு பேய்:-

மது, புகையிலை ஆகியவை முதலில் வழி கொடுத்து பிறகு அதையும் தாண்டி கஞ்சா, பிரவுன் சுகர், கொகைன், ஹெராயின் போன்ற மனிதனை அழிக்கும் போதைப் பொருட்கள் பல.

போதைக்கு அடிமை:

வீட்டில் வசிக்கும் யாராயினும் ஒரு நபர் மதுபானம், புகையிலை போன்றவற்றை பயன்படுத்துவோராக இருந்தால், அவ்வீட்டில் வசிக்கும் சிறுவர்களும் அதனைப் பயன்படுத்த தூண்டப்படுகிறார்கள். சிலர் நாகரீக மோகத்தினால் மதுவைப் பயன்படுத்துவோரும். உள்ளனர். போதைப்பொருட்களை பயன்படுத்தும் போது அவற்றிக்கு அடிமையாகி நாளடைவில் அவை இன்றி வாழ முடியாத நிலையை உருவாக்கும்.

போதை ஒழிப்பு:

ஆண்டுதோறும் ஜீன் 26 ஆம் நாள் சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினம் மற்றும் சித்ரவதைக்கு ஆளானவர்களுக்கான ஆதாரம் தினம் அனுசரிக்கப்படுகிறது. போதைப் பொருட்களின் மீது அதிக வரியினை விதிப்பதும் சட்டதிட்டங்களை கடுமையாக்குவதும் போதைப் பொருட்களை ஒழிப்பதற்கான வழியாகும்.

போதையற்ற உலகம் அவசியம்:-

மனச்சிதைவு, உடல்நலக் கோளாறு, நாள்பட்ட நோய்கள், தீராத வலி இவை தான் போதைப் பொருள் பயன்பாடு நமக்கு தரும் பரிசுகள் "இன்றைய இளைஞர்கள் நாளைய

| | | |
|---|---|---|
| | தலைவர்கள் என்பார்கள். அவர்கள் போதை பழக்கத்திற்கு அடிமையாகி விட்டால் நாடு எப்படி முன்னேற்றம் அடையும்? மனித ஆற்றலை உருக்குலைத்து, அந்த மனித சக்தியை ஒன்றுக்கு உதவாததாக மாற்றும் சக்தி படைத்தவை போதைப் பொருட்கள். இது மட்டுமின்றி சமூகத்திற்கு எதிரான சீர்கேடுகளை செய்ய தூண்டுகிறது.<br>முடிவுரை:-<br>போதைப் பொருட்களால் ஏற்பட்டிருக்கும் களங்கத்தை துடைப்போம் என்றும் பாகுபாடு காட்டாமல் போதைப் பொருட்களை தடுப்போம் இந்த விவகாரத்தில் அடுத்தவர்களின் கண்டிப்பும். அணுகுமுறையும் நமக்கு பலன் தராது, போதை இல்லா உலகை உருவாக்க வேண்டும் என ஒவ்வொருவரும் முடிவு செய்தால் மட்டும் போதை ஒழிப்பு சாத்தியம்.<br>போதைப் பொருளை ஒழிப்போம் ! மாணவ சமுதாயத்தைக் காப்போம் !<br>எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவோம் ! | |


| ஆக்கம் | |
|---|---|
| இராஜ.வேல்முருகன்<br>நேரு மேல்நிலைப்பள்ளி, எறையூர்<br>வேப்பந்தட்டை வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621133 | பெ. ஜெயராமன்<br>அரசு மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம்,<br>பெரம்பலூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621101. |